**செ. கு. எண்: 230** **நாள்:28.10.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 28.10.2020

நாமக்கல் மாவட்டம், குள்ளப்பநாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் மாநில தலைவர் திரு. கே.ஏ. செங்கோட்டுவேல் அவர்கள் உடல் நலக் குறைவு காரணமாக இன்று **(28.10.2020)** மாரடைப்பு ஏற்பட்டு காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்க தலைவர் உள்பட பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றிய அண்ணன் திரு. கே.ஏ. செங்கோட்டுவேல் அவர்கள் பொது வாழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளின் வளர்ச்சிக்காவும், நலன்களுக்காவும் உழைத்ததேடு மட்டுமின்றி அவர்களின் உரிமைகளை பாதுகாத்தவர்.

திரு. செங்கோட்டுவேல் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க உறுப்பினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**